## இணைப்பு

## நிர்வாக இயக்குனர் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பழ மரங்களின் மகசூல் பலனை 2024 ஆம் ஆண்டு அனுபவிப்பதற்கான உரிமையை பெறுவதற்கு ஒப்பந்த புள்ளி மூலம் பெறுவதற்கான நிபந்தனைகள்

1. நிர்வாக இயக்குனர் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பழ மரங்களின் ( மா, முந்திரி , புளி , பனை மற்றும் நாவல்) மகசூல் பலனை 2025 ஆம் ஆண்டு அனுபவிப்பதற்கான உரிமையை பெறுவதற்கு நிர்வாக இயக்குனர் , தமிழ்நாடு பால் உற்பத்தி கூட்டுறவு இணையம் , முத்துராமலிங்கனார் சாலை , ஆவின் இல்லம் , நந்தனம் சென்னை-35 அவர்களால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்த புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

2. இந்த ஒப்பந்த புள்ளியை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் மட்டுமே பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். தனியாக கடிதத்தில் அனுப்பப்படும் ஒப்பந்த புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

3. அ) அலுவலக முத்திரையிடப்பட்ட ஒப்பந்த புள்ளி படிவங்கள் இவ்வலுவலகத்தில் 28.02.2025 to 07.03.2025 ஆம் ஆண்டு தேதி இவ்வலுவலக நேரப்படி முற்பகல் 11.00 மணிக்குள் ஒப்படைக்கப்பட வேண்டும். நேரிலோ அல்லது பதிவு தபால் மூலமாகவோ அனுப்பலாம். அலுவலகத்திற்கு குறித்த நேரத்திற்குள் வந்து சேர வேண்டும் . நேரிலோ அல்லது பதிவு தபால் மூலமாகவோ அனுப்பப்பட்ட இவ்வுரைகள் குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு கிடைக்கப்பெற்றால் அவை நிராகரிக்கப்படும்.

ஆ) மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்த புள்ளிகள் 07.03.2025 அன்று 11.30 மணிக்கு நிர்வாக இயக்குனர் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் , முத்துராமலிங்கனார் சாலை , நந்தனம் , சென்னை 35 நிர்வாக இயக்குனரால் அங்கீகாரம் பெற்ற அலுவலர் குழுவினால் ஒப்பந்த புள்ளி அளித்தவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

4. கோரும் ஒப்பந்த புள்ளி தொகை முழு ரூபாயில் எண்ணாலும் எழுத்தாலும் அடித்தல் திரித்தல்கள் இன்றி எழுதப்பட்டிருக்க வேண்டும்.

5. அ) ஒப்பந்த புள்ளிகளை பிரிக்கும் போது ஒப்பந்தப் புள்ளி அனுப்பியவரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அங்கீகரிக்கப்பட்டவரோ உடன் இருக்கலாம். நியமனம் பெற்றவர் அந்த நியமன கடிதத்தை விலை புள்ளி உரைகள் பிரிக்கப்படும் முன்பே ஒப்பந்த புள்ளி திறக்கும் அலுவலர்கள் குழுவில் குழுவிடம் நேரில் சமர்ப்பித்து அனுமதி பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

ஆ) வெற்றி பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுப்பியவர் மட்டுமே பல மரங்களின் பலனை அனுபவிக்க அனுமதிக்கப்படுவார்.

6. நிர்வாக இயக்குனர் , தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் அவர்களுக்கு ஒப்பந்த புள்ளிகளில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையோ எவ்வித காரணம் கூறாமல் நிராகரிக்க உரிமை உண்டு.

7. ஒப்பந்தப்புள்ளி ஒவ்வொன்றிலும் **The Managing Director, TCMPF Limited , Chennai -35** என்ற பெயரில் முன்வைப்புத் தொகை ரூ.10,000/- கேட்பு வரைவோலையாக (Demanad Draft) இணைக்கப்பட வேண்டும். அவ்வாறு கேட்பு வரைவோலை இணைக்கப்படாமல் பெறப்படும் ஒப்பந்த புள்ளி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஒப்பந்த புள்ளியில் மூலம் வெற்றி பெறாத ஒப்பந்ததாரர்களுக்கு அவர்கள் செலுத்திய முன்வைப்புத் தொகை, ஒப்பந்த புள்ளிகளை பரிசீலித்து முடிவு செய்த பிறகு திரும்ப வழங்கப்படும்.

8. தேர்வு பெற்ற ஒப்பந்ததாரர் நிர்வாக இயக்குனர் ,தமிழ்நாடு பால் உற்பத்தி கூட்டுறவு இணையம் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட ஏழு தினங்களுக்குள் தம்முடைய முழு ஒப்பந்த தொகையையும் (ஒப்பந்த தொகை மற்றும் காப்பு தொகையை) இவ்வலுவலக நிர்வாக இயக்குனர் பெயரில் கேட்பு வரைவோலையாக செலுத்த வேண்டும். ஏழு தினங்களுக்குள் குத்தகை தொகை செலுத்த தவறினால் ஒப்பந்த புள்ளியை நிராகரிப்பதுடன் அன்னாரால் செலுத்தப்பட்ட முன்வைப்புத் தொகை இணையத்திற்கு பறிமுதல் செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். முடிவு செய்யும்போது முதல் டெண்டர் காட்டிலும் மறு டெண்டரில் கிடைக்கும் தொகையில் இணையத்திற்கு நட்டம் ஏற்படும் அதன் வித்தியாச தொகையை முதல் டென்டரில் வழங்கப்பட்டு தேர்வு பெற்ற ஒப்பந்ததாரரிடம் இருந்து பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

9. ஒப்பந்தத்தொகை (ஒப்பந்த தொகை மற்றும் காப்புத்தொகை) முழுவதையும் செலுத்தாத வரை வெற்றி பெற்ற ஒப்பந்ததாரர் மரங்களின் பலனை அனுபவிக்க இயலாது.

10. அதிக ஒப்பந்தப்புள்ளி கேட்டவர் ஏழு தினங்களுக்குள் ஒப்பந்த புள்ளி முழுத் தொகையையும் (ஒப்பந்த தொகை மற்றும் காப்புத்தொகை உட்பட) செலுத்திய பின் ரூ.100/- மதிப்புள்ள பத்திரத்தில் உடன்படிக்கை எழுதிக் கொடுத்த பிறகே மரங்கள் ஒப்பந்ததாரருக்கு ஒப்படைக்க ஒப்பந்த குழுவின் மூலம் ஆணை வழங்கப்படும்.

11. ஒப்பந்ததாரர் காப்பு தொகையாக ஒப்பந்த புள்ளி தொகையில் 5% செலுத்த வேண்டும். இத்தொகை ஒப்பந்ததாரர் தான் தன் குத்தகை காலம் முடிந்தவுடன்

தோப்பிற்கு எந்தவித பாதகமும் இன்றி இணைய அலுவலரிடம் மரங்களை திருப்பி ஒப்படைத்த பிறகு நான் திரும்ப வழங்கப்படும்.

12. எந்த காரணத்தைக் கொண்டும் வெற்றி பெற்ற ஒப்பந்ததாரோ அல்லது முகவரோ தோப்பிற்குள் அல்லது பால்பண்ணை எல்லைக்குள் நிலையாக குடியிருக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

13. இந்த ஒப்பந்த படிவத்தில் குறிப்பிட்டப்பட்டுள்ள மீறும் விதிகளை மேலும் தருணத்தில் இணையத்திற்கு ஏற்படும் அனைத்து நட்டத்திற்கும் வெற்றி பெற்ற ஒப்பந்ததாரரை பொறுப்பாளி ஆவார் இந்த நட்டத்தை நில தீர்வை நிலுவை போன்று அவர்களிடம் இருந்து வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

14. இது குறித்து நிர்வாக இயக்குனர் தமிழ்நாடு பால் உற்பத்தி கூட்டுறவு இணையம் அவர்கள் தன்னுடைய ஒன்று அல்லது எல்லா செயல்முறை அதிகாரங்களையும் தன் ஆளுகையின் கீழ் பணியாற்றும் ஒரு உயர் மட்ட அலுவலருக்கு அளிக்கலாம்.

15. மரங்களில் பழங்களைத் தவிர மரத்தின் கிளைகளையோ, இலைகளையோ எந்த காரணத்தை கொண்டும் ஒப்பந்ததாரர் வெட்டுவதற்கோ பண்ணையில் இருந்து அப்புறப்படுத்துவதற்கோ அனுமதிக்கப்பட மாட்டார். பலன் தரும் மரங்களை குத்தகை காலத்தில் சீரான நிலையில் வைத்திருக்க வேண்டும் ஒப்பந்தபுள்ளி காலத்தில் மரங்களை ஒப்பந்ததாரர் சரிவர பாதுகாத்து வராவிட்டால் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தம் விளக்கிக் கொள்ளப்படும். இது தவிர இணையத்தில் அவர் செலுத்திய ஒப்பந்தப்புள்ளி தொகையும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

16.பழங்களை பறிப்பது அவைகளை வெளியே எடுத்து செல்வது ஆகிய வேலைகளை காலை 6 மணி முதல் மாலை 5:30 மணிக்குள் தான் செய்திட வேண்டும். இந்த கால அளவுக்கு முன்னரோ அல்லது பின்னரோ எக்காரணத்தைக் கொண்டும் மேற்படி பணிகளை செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் தோப்பின் அங்கீகரிக்கப்பட்ட பணிகளை செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் தோப்பின் அங்கீகரிக்கப்பட்ட நுழைவாயில்கள் மூலம் தான் பழங்களை வெளியே கொண்டு செல்ல வேண்டும். அன்றாடம் அறுவடை செய்திலும் பழங்களை அன்றன்றே வெளியே எடுத்து செல்ல வேண்டும்.

17. ஒப்பந்ததாரர் ஒப்பந்த காலத்தில் தோப்பினை சுற்றி வேலி அமைத்தல் மற்றும் மரங்களுக்கு நீர் பாய்ச்சுதல் போன்ற பணிகளை தங்கள் செலவிலேயே செய்ய வேண்டும் . வெற்றி பெற்ற ஒப்பந்தக்காரர்கள் மரத்தை சுற்றியுள்ள புதர்களை அவர்களே தங்கள் செலவில் அகற்றி சுத்தப்படுத்தி கொடுக்க வேண்டும். தோட்டத்தில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

18. தாங்கள் ஒப்பந்த புள்ளியில் எடுத்த மரங்களின் பலன்களை அனுபவிக்கும் உரிமையை எந்த காரணத்தை கொண்டும் ஒப்பந்தக்காரர் மற்றொருவருக்கு சார்பு குத்தகைக்கு (Sub Contract) விடுதல் கூடாது. ஒப்பந்தத்தில் வெற்றி பெற்றவர் தன் உரிமை மாறுதல் செய்யவோ அல்லது புதிதாக பங்குதாரர்களை சேர்க்கவோ எக்காரணத்தைக் கொண்டு அனுமதிக்கப்பட மாட்டாது.

19. ஒப்பந்த காலத்தில் ஒப்பந்ததாரருக்கு இயற்கையினால் ஏற்படும் நட்டங்களுக்கு இணையம் யாதொரு பொறுப்பும் ஏற்காது.

20. ஒப்பந்த காலத்தில் ஒப்பந்ததாரோ அல்லது அவரது முகவரோ இணையத்தில் உள்ள அலுவலர் மற்றும் இதர பணியாளர்களால் அன்றாடம் மேற்கொள்ளப்படும் இதர பணிகளுக்கு எந்தவித வகையிலும் இடையூறாக இருத்தல் கூடாது.

21. ஒப்பந்த புள்ளியில் வெற்றி பெற்றவர்கள் பல மரங்களை அனுபவிக்கும் அனுபவித்துக் கொள்ளும் உரிமை ஒப்பந்த காலம் 31.08.2025 வரை மட்டும்.

22. ஒப்பந்ததாரர் இதில் கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் படி நடத்திட வேண்டும். அவ்வாறு நடக்கத் தவறினால் ஒப்பந்தத்தை ரத்து செய்ய நிர்வாக இயக்குனருக்கு முழு அதிகாரம் உண்டு.

23. எந்தவித முரண்பாடுகளிலும் நிர்வாக இயக்குனர் , தமிழ்நாடு பால் உற்பத்தி கூட்டுறவு இணையம் அவர்களின் முடிவை இறுதியானது

24. ஒப்பந்ததாரர் குத்தகைக்கு எடுத்துள்ள தோப்பில் காவல் பணி மேற்கொள்ள அனுமதிக்கப்படும் நபர்கள் சட்டம் ஒழுங்கு சீர்குலைக்கும் எவ்விதமான நடவடிக்கைகளும் ஈடுபடக் கூடாது. அவ்வாறு சட்ட விரோதமான நடவடிக்கைகள் நடப்பது தெரியவரும் பட்சத்தில் குத்தகை ரத்து செய்யப்பட்டு செலுத்தப்பட்ட ஒப்பந்த தொகை திரும்ப வழங்கப்பட மாட்டாது. மேலும் காவல்துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் காவல் பணி மேற்கொள்ள ஒப்பந்ததாரினால் முன்கூட்டியே நியமனம் செய்தவரை அலுவலகத்திற்கு தெரிவித்திட வேண்டும் . காவலர்கள் தவிர வேறு நபர்கள் மாலை 5.30 மணிக்கு மேல் காலை 6 மணி வரை தோப்பிற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். காவலர்கள் நிரந்தரமாக தோப்பிற்குள் தங்கிட அனுமதிக்கப்பட மாட்டாது.

அ) ஒப்பந்ததாரர் தோப்பினை சுற்றி வேலி அமைத்தல் தவிர வேறு எந்த தற்காலிக மற்றும் நிரந்தர அமைப்புகளை தோப்பிற்குள் அமைத்தல் கூடாது.

ஆ) ஒப்பந்ததாரர் கோழி ஆடு போன்ற கால்நடைகளை தோப்பிற்குள் பராமரிக்கக் கூடாது.

25. ஒப்பந்ததாரர் ஒப்பந்த புள்ளியுடன் தனது PAN NUMBER குறிப்பிட்டு அதற்கான நகலை இணைத்திட வேண்டும். PAN NUMBER இல்லாதவர்கள் PAN NUMBER , பெறுவதற்கான விண்ணப்பத்தின் நகலை இணைக்க வேண்டும்.

26.ஒப்பந்த காலம் முடிவடைந்த உடன் தோப்பினை ஒப்பந்தக்காரர் காலி செய்து இணையத்திடம் ஒப்படைத்திட வேண்டும்.